**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 396/2015**

திரு. மணிவண்ணன் (P.W. –1) **04.08.2025**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு **5** ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் 7.9.2023 ஆம் தேதி திருப்பூர் மாவட்ட பதிவாளர் அவர்களின் நடவடிக்கைகள் என்றால் சரி. அது பி.வா.சா.ஆ–7 தாவா சொத்துக்களில் பட்டா மாற்றம் செய்யும்படி கொடுக்கப்பட்ட மனு வருவாய் கோட்டாட்சியரிடம் விசாரணை நடந்து தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது எனக்கு உத்தரவுகள் வரவில்லை. தாவா சொத்தில் ப்ளூ கலர் ஷெட் உள்ளது என்றால் ஆமாம். நாய் வளர்ப்பதற்காக நான் தான் அமைத்தேன். தாவா வழக்குறையில் 7.8.2002 ஆம் தேதி தாவா சொத்துக்களை மூன்றாம் பிரதிவாதி கிரயம் பெற்றதாக தெரிந்து கொண்டேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த தேதி தவறு சரியான தேதி தாவாவில் சொல்லிவிட்டு தற்போது வழக்கிற்காக மாற்றி கூறுகிறேன் என்றால் தவறு.

2. தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இல்லை. ஐந்தாம் பிரதிவாதி தான் சுவாதீனத்தில் உள்ளார் என்றால் தவறு. அதனால் தான் ஆர்டிஓ உத்தரவை எதிர்த்து டிஆர்ஓ ஏற்படுத்திய உத்தரவுகளை தெரியாது என்று பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் தவறு. அம்மாதிரி உத்தரவுகள் வரவில்லை டிஆர்ஓவிடம் நான் மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை.

4 ம் பிரதிவாதி இதே குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்கிறார்.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.08.04 19:04:09 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.